# என்னுடைய திருச்சபை மற்றும் மற்றவர்களும்

# MY CHURCH AND OTHERS



முல்லர்

MULLER

# என்னுடைய திருச்சபையும் மற்றும் மற்றவர்களும்

**(My Church and others)**

A summary of the teachings of the Lutheran Church. As Distinguished from those of other denominations.

**மற்ற கிறிஸ்துவ கூட்டத்தாரிடத்திலிருந்து பிரத்யேகமாக்கப்பட்ட லூத்தரன் சுவிசேஷ திருச்சபையினுடைய உபதேசங்களின் சாராம்சம்.**


**ஜான் தியோடார் முல்லர்**

**JOHN THEODORE MULLER**

Translated by :

Pastor. **D. PAUL BAKTHAVACHALAM**

Vice President,

BELC


**"Now I beseech you, bretheren, Mark them which cause divisions and offences contrary to the Doctrine which you have learned and avoid them."**

**Rom. 16:17.**

அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும், உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களைவிட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.

***ரோம. 16:17.***


*Bharath Evangelical Lutheran Church*

Nagalapuram - 517589.

## முதல் பாகம்

## 1. பரிசுத்த வேதாகமத்தைப் பற்றின உபதேசம்

### பரிசுத்த வேதாகமம்

அ) பரிசுத்த வேதாகமமானது இவ்வுலகத்தில் உள்ள மற்ற எல்லா புத்தகங்களிலிருந்தும் வேறுபட்டதாயும், அவைகளைப் போல் இல்லாமல் விசேஷமாய் இருந்து அவைகள் தேவனுடைய வார்த்தையாகவும் இருக்கிறது. ஏனென்றால், பரிசுத்த வேதாகமமானது (வேதாகம வசனங்கள் எல்லாம்) மனிதர்கள் அவைகளை தம் சொந்த ஆலோசனையில் எழுதாமல் பரிசுத்த ஆவியின் உள்ளுதலினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது.

2 தீமோ 3:16-17, 16 வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுசன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,

அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்த்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது.

2 பேதுரு 1:21 தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். யோவான் 17 : 8 - நீர் எனக்கு

கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்கு கொடுத்தேன். அவர்கள் அவைகளை ஏற்றுக் கொண்டு நான் உம்மிடத்திலிருந்து வந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள்.

1 கொரி. 2:13 அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்மந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்.

ஆ) ஆதியிலிருந்து இந்த பரிசுத்த வார்த்தைகளை தேவனுடைய வாக்கயமாயிருந்து, தேவ ஆவியானவரின் உள்ளதுலினால் ஏவப்பட்டு பரிசுத்த மனிதர்களால் எழுதப்பட்டதும், தவறுகள் இல்லாததும், முரண்பாடுகள் இல்லாததும், உபதேசித்தலுக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், நீதியை நடப்பிப்பதற்கும் ஏற்ற ஒரே சாசன நூல் வேதாகம புத்தகம் என்று விசுவாசித்து அறிக்கையிடுகிறோம்.

யோவான் 10:35 - வேத வாக்கியமும் தவறாததாயிருக்க.

யோவான் 17:17 உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம்.

இ) திருச்சபையில் போதிக்கப்படுகின்ற எல்லா உபதேசங்களையும் எடுத்துக் கொள்வதற்கு இந்த பரிசுத்த வேதாகமம் நமக்கு ஒரு திவ்யமான மாற்றாயிருக்கிறது. மற்றும் திருச்சபையில் போதிக்கப்படுகின்ற உபதேசங்கள் மற்றும் சொல்லப்படுபவைகளை சரியாக அளவெடுப்பதற்கு இந்த வேதாகமப் புத்தகமே நமக்கு சரியான அளவுகோலாகவும், ஒரே சாஷன நூலாகவும் இருக்கிறது என்று விசுவாசித்து அறிக்கையிடுகிறோம்.

எபேசி 2:20 - அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவராயிருக்கிறீர்கள் அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்.

1 பேதுரு 4:11 - ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்.

யோவான் 5:39 - வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்ய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத இந்த கீழ்கண்ட உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

***கவனிக்கவும் :*** இந்நாட்களில் அநேக கிறிஸ்துவ பிரிவைச் சேர்ந்தவர்கள் உபதேசத்திற்கு எவ்விதத்திலும் முக்கியத்துவம் கொடுக்காததினால் அவர்கள் சொல்லுகிறது எந்த உபதேசத்திற்கு சம்மந்தம் உடையது என்றுகூட நாம் சரியாக உறுதி செய்வது கஷ்டமாயிருக்கிறது.

1) ரோமன் கத்தோலிக் சபையினர் மற்றும் ஈஸ்டரன் ஆர்தோடக்ஸ் சபையைச் சேர்ந்தவர்கள் போதிக்கிற பிரகாரம் பிரதான விசுவாசத்திற்கு, உற்பத்தி ஸ்தானம் பரிசுத்த வேதாகமத்தின் வழியில் மறைக்கப்பட்ட வேதாகமத்துடன் (அப்போகிரையா) மற்றும் முற்பிதாக்களின் வைதீக சமயக் காரியங்களையும்கூட நாங்கள் ஏற்க மறுக்கிறோம். உபாக 4:2, லூக்கா 16:27,யோவான் 8:31-32 (மாற்கு (7:13, கொலே 2:8).

2) சால்ஷேன் ஆர்மி, மோர்மோன்ஸ் (மோர்மோன்கள்) Quakers, Shakers சர்ச்சஸ் ஆப்தி நியு ஜெருசலேம், ஆவியை ஆராதிப்பவர்கள்,

கிறிஸ்துவ விஞ்ஞானிகள், சீயோனிலிருக்கிற கிறிஸ்துவ கத்தோலிக்க சபை அல்லது (Dowieites) இவர்கள் சொல்லுகிறபடி பிரமாணமான விசுவாசத்திற்கு ஊற்றுமூலம் புதிய வெளிப்பாடு கூட காரணம் என்கிறதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபி. 1:1-2, கலாத் 1:8, மத். 28:19, 2 தீமோ 3:15-17, லூக். 16:31.

3) யூனிட்டெரியன்கள், யூனிவர்ஸலிஸ்டுகள், நியாயப்படி நடப்பவர், மாடர்னிஸ்ட்கள், முதலானவர்கள் சொல்லுகிறபடி விசுவாசத்தின் உற்பத்தி மூல ஸ்தானம் வேதாகமம் வார்த்தைகள் என்றால் அது அந்த விஷேஷ காரணத்திற்கு சரி போயிற்று என்பது வரைக்கு மாத்திரமே அங்கீகரிக்கப்படும் என்று அவர்கள் சொல்லுகிறதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 கொல் 1:21, கொலே 2:8, 2 கொரி 10:5, 1 கொரி 2:4-5, 14, (1 தீமோ 6:20-21).

4) யூனிட்டெரியன்கள், நியாயப்படி நடப்பவர்கள், Quakers மாடர்ன் செக்டேரியன் சர்ச், (அநேக பிரிவுகளில் உள்ள மாடர்னிஸ்டுகள்) சொல்லுகிற வண்ணம் வேதாகமத்தில் கேவலம் கொஞ்சம் மாத்திரமே தேவனுடைய வார்த்தைகள் அடங்கியிருக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

மத். 5:18-19, (1 கொரி 15:54, கிரேக்க வார்த்தையில் எழுதப்பட்ட வாக்கியம்).

5) யூனிட் டெரியன்கள், நியாயப்படி நடப்பவர்கள், சர்ச்சஸ் ஆப் தி நியூ ஜெருசலேம், ஆவியை ஆராதிப்பவர்கள், கிறிஸ்டியன் சர்ச், மாடர்ன் செக்டேரியன் சர்ச் முதலானவர்கள் சொல்லுகிறபடி வேதாகமம் புத்தகத்தில் இருப்பவைகள் எல்லாம் தேவனுடைய ஏவுதலினால் எழுதப்படவில்லை.

ஆகவே எழுதினவர்கள் கொஞ்சம் தப்பு எழுதுவதற்கு அவகாசம் உள்ளது என்று அவர்கள் சொல்லுகிறதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபி. 4:12, யோவான் 12:4-8, கலாத் 6:16, மத் 4:4, 2 பேதுரு 1:16.

6) ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்ட்டிரன் ஆர்தோ டக்ஸ் சபை, மோர்மோன்கள், Shakers முதலான சபைகள் சொல்லுகிறபடி பரிசுத்த வேதாகம வார்த்தைகள் பூர்த்தியடையாததால் குறைவுள்ளதாயிருக்கிறது என்பதையும் ரோமன் கத்தோலிக்க சபை, ஈஸ்டர்ன் ஆர்தோடக்ஸ் சபையினர் சொல்லுகிறபடி பரிசுத்த வேதாகம வார்த்தைகள் மர்மமாயிருக்கிறது. அவைகளுக்கு சபையினுடைய விவரனை அவசரம் என்பதையும் Quakers மற்றும் Mennonites சொல்லுகிறபடி பரிசுத்த வேதாகம வார்த்தைகளுக்கு அந்தரங்க வெளிச்சத்துடனே விவரித்து சொல்ல வேண்டியது அவசரம் என்பதையும், கிறிஸ்துவ சபை, யூனிட்டேரியன், யூனிவர்ஸலிஸ்டு, ஆர் மினியன்கள், மாடர்னிஸ்டுகள் இவர்கள் சொல்லுகிறபடி வேதாகம வார்த்தைகளின் விவரிப்புக்கு மனிதனுடைய ஞானம் அவசரம் என்ற முதலான வாக்கு வாதங்கள் அனைத்தையும் நாங்கள் ஏற்க மறுக்கிறோம். சங். 119:105, 130 2 கொரி 4:3-4 யோவான் 20:31, யோவான் 5:39 (எபேசி 3:3-4, சங். 19:8).

7) Quakers கல்வானிஷ்டுகள், சபை, காங்கிரிகே ஜனலிஸ்டுகள், பிரஸ்பைடைரியன்கள், மெத்தடிஸ்டுகள், கேம்ப்பெல்லிஸ்டுகள், (கிறிஸ்துவின் சீடர்கள்), மாடர்னிஸ்டுகள், முதலான சபை பிரிவினர்கள் சொல்லுகிறபடி பரிசுத்த வேதாகம வார்த்தைகள் பாவிகளை எழுப்புவதற்கு மற்றும் அவர்களை பாவ ஜீவியத்திலிருந்து மாற்றுவதற்கு சக்தியில்லாததாயிருக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யோவான் 6:63 ரோமர் 1:16 யாக். 1:21, யோவான் 17:20.

8) ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்ட்டரன் ஆர்தோடக்கஸ் சபையினர் சொல்லுகிறபடி தெய்வீக உபதேசியர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகட்டும் பரிசுத்த வேதாகமத்தினை படிப்பதற்கு தடை செய்யப்பட்டுள்ளனர் என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத். 23:13, 1 தெச 5:27, யோவான் 5:39, 2 தீமோ 3:15.

***கவனிக்கவும் :*** புராட்டெஸ்ட்ண்டுகள் போட்டியை தாங்கிக் கொள்வதற்கு இந்த உபதேசங்களை இன்னும் ரோம மத குருக்கள் அமல்படுத்துகிறதை அவர்கள் உறுப்பினர்கள் அனைவரும் அபிஷேகம் பெற்று பரிசுத்த வேதாகமத்தை படியுங்கள் என்று சொல்லுகிறார்கள்.

***கவனத்திற்கு :*** இம்மாதிரி வேதாகமத்தை குறித்து தப்பான உபதேசங்களை அனுசரித்திக்கிற முறையானது மேல் சொல்லப்பட்ட சபைகளில் மாத்திரமே இல்லாமல் இன்னும் அநேக மற்ற சபைகளில்கூட போதிக்கப்படுகின்றது.

வியாக்கியான கர்த்தாக்கள் பிடியில் இருக்கிறார்கள். இந்நாட்களில் கொஞ்ச திருச்சபையினர் மாத்திரமே நிஜமான ஆவியினால் ஏவப்பட்டு கூடின உபதேசங்களை உபதேசிக்கின்றார்கள்.

## 2. தேவனுடைய இயற்கையான (அல்லது) ஞானத்தைக் குறித்த உபதேசம்

## DOCTRINE OF THE NATURAL KOLEDDGE OF GOD.

கீழ்க்கண்ட விஷயங்களை நாங்கள் விசுவாசிக்கின்றோம்.

அ) சுபாவத்தில் மனுஷரெல்லாரும் தேவனுடைய இயற்கையான ஞானத்தை உடையவர்களாய் இருக்கிறார்கள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ரோமர் 1:18-20. சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுசருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. 19 தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். 20 - எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும் ஆதலால் அவர்கள் போக்கு சொல்ல இடமில்லை.

ஆ) இந்த இயற்கையான ஞானத்தின் முறையில் தேவனுடைய கிரியைமூலம் மாத்திரமே அல்லாமல் தேவன் மனிதனுடைய இருதயத்தில் நியாயப்பிரமாணத்தை எழுதி வைத்திருக்கிறார். ஆகவே மனிதன் மனசாட்சியினிமித்தம்கூட இந்த இயற்கையான ஞானத்தை பெற்றுக் கொள்ளமுடியும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ரோமர் 2:14-15. அன்றியும் நியாயப் பிரமாணமில்லாத புற ஜாதிகள் சுபாவமாய் நியாயப் பிரமானத்தின்படி செய்கிறபோது, நியாயப் பிரமாணமில்லாத அவர்களை தங்களுக்கு தாங்களே நியாயப் பிரமாணமாயிருக்கிறார்கள்.

15 அவர்களுடைய மனச்சாட்சியும்கூட சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு, குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப் பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்.

இ) ஆனால் மனிதனுடைய இந்த இயற்கை அறிவு அவன் இரட்சிக்கப்படுவதற்கு எம்மாத்திரமும் சரி போகாது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ரோமர் 10:17. ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். அப். 4:12 - அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை நாம் இரட்சிக்கப்படும்படிக்கு மேலே வானத்தின் கீழெங்கும், மனுசர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.

இன்னும் - எபேசி 2:11-12, ரோமர் 16:25, 1 கொரி 1:18-30, கூட ஒப்பிட்டு பார்க்கவும்.

## வேதாகமத்தின் அடிப்படையில் கீழ்கண்ட உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1) யூனிட்டேரியன்கள், மோர்மோன்கள், சொல்லுகிறபடி மனிதர்கள் சுபாவத்தில் தேவனுடைய இயற்கை அறிவை உடையவர்களால் இல்லை என்ற வாக்குவாதத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். அப். 17:27, சங். 94:9, சங். 10:1-3.

2) கியூக்கர்கள், ஆர்மேனியன்கள், யூனிட்டேரியன்கள், சர்சஷ்ப ஆப் தி நியூ ஜெருசலேம், சால்வேஷன் ஆர்மி, கல்வானிஸ்ட் சபை, மாடர்னிஸ்டுகள் முதலான சபைகள் சொல்லுகிறபடி

மனுஷர்கள் சுவிஷேசத்தின்மூலம் வெளிப்படுத்தப்படுகிற சத்தியத்தின்படி அல்லாமல் தன்னுடைய சுபாவ அறிவின் மூலம் இரட்சிப்பை பெற முடியும் என்று அவர்கள் சொல்லுகிறதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யோவான் 1:18, யோவான் 17:3.

***கவனிக்கவும் :*** இந்த தப்பான உபதேசங்கள் இப்பொழுது சர்வ சாதாரணமாயிருக்கிறது. சுதந்தரவாதிகள் மூலம் இது இன்னும் அதிகமாக விசுவாச பிரபல்யமாகிறது. புண்ணிய காரியங்கள் எவ்வளவு அதிகமாக செய்தால் யாராயிருந்தாலும் சரி இரட்சிப்பை பெற முடியும் என்று அவர்களுடைய வாதம் இருக்கிறது. புதிய புதிய நவீன உதாரணங்கள் இந்த தப்பான உபதேசத்தை இன்னும் அதிகமாக பிரபல்யமாவதற்கு பெலப்படுத்துகிறது.

## 3. தேவனைப் பற்றின உபதேசம்

## DOCTRINE OF GOD

### இந்த கீழ்கண்ட விஷயங்களை நாங்கள் விசுவாசிக்கின்றோம்.

அ) உன்னதமான பரிசுத்த திரித்துவ உபதேசத்தை நாங்கள் விசுவாசிக்கின்றோம். ஒரே நிஜமான திரித்துவ தேவன், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூவர். மூன்று ஆள் தத்துவமுள்ளவர், ஒரே தேவத்துவத்தை உடையவர்கள் இம்மூவரும் சரி சமமான வல்லமையுடையவர்கள். இம்மூவரும் சரி சமமான துதிக்கும், கணத்திற்கும், மகிமைக்கும் பாத்திரமானவர்கள் இம்மூவரும் ஒரே தேவத்துவத்தை காட்டுவதே இதற்கு காரணமாயிருக்கிறது. கடவுள் திரித்துவமானவர். திரிதேயக நிலையிலிருக்கும் திரிதேயக தேவன் ஆவார் என்று விசுவாசித்து அறிக்கையிடுகிறோம்.

1 கொரி 8:4, உலகத்திலே விக்கிரமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம்.

மத். 28:19 - ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும்

சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்ஞானம் கொடுத்து -

யோவான் 10:30 - நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்.

ஆ) இந்த விசுவாச சம்மந்தமான திரித்துவம் எவ்வளவோ முக்கியமானது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். இந்த பரிசுத்த திரித்துவத்தை தள்ளி விடுகிற போதகர்கள் மற்றும் கிறிஸ்துவ பிரிவுகள் அனைத்தும் கிறிஸ்து சபைக்கு வெளியே இருக்கிறார்கள் மற்றும் அவர்கள் இரட்சிப்பை பெறுகிற அவகாசம் எம்மாத்திரம் இல்லாதவர்களாய் இருக்கிறார்கள். இந்த உபதேசம் சுதந்திரவாதிகளை கண்டிக்கிறது. 1 யோவான் 2:23. குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவை உடையவனல்ல. குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்.

**<u>வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத இந்த கீழ்கண்ட உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.</u>**

1) மோர்மோன்கள். ஏழாம் நாளை ஆசரிப்போர், சொல்லுகின்றபடி தேவன் வஸ்துக்களால் சிருஷ்டிக்கப்பட்டார் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யோவான் 4:24 (ஏசய் 57:15).

2) யூனிட்டேரியன்கள், ஆர்மோனியன்கள், மோர்மோன்கள், ஏழாம் நாளை ஆசரிப்போர், சொல்லுகிறபடி நித்தியத்துவத்திலிருந்து வந்தவர் ஒரே தேவனே அல்லாமல் நித்தியத்திலிருந்து வந்தவர்கள் இன்னும் மற்றவர்கள்கூட இருக்கிறார்கள் என்று அவர்கள் சொல்லுவதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். சங். 90:2, ரோமர் 11:36, (யோவான் 1:1-13).

3) யூனிட்டேரியன்கள் சொல்லுகிறபடி தேவன் நடக்கப்போகிற காரியங்கள் அனைத்தையும் அறியாதவர் என்ற அவர்கள் வாதத்தை நாங்கள் தள்ளி விடுகிறோம். எபி. 4:13, சங். 139:1-4.

4) யூனிட்டேரியன்கள், ஆர்மேனியன்கள், மோர்மோன்கள், ஏழாம் நாளை ஆசிரிப்போர், சொல்லுகிறபடி தேவன் எங்கும் வியாபித்துள்ள சர்வ வியாபி அல்ல என்ற அவர்களுடைய வாதத்தை நாங்கள் தள்ளி விடுகிறோம். அப். 17:27-28, ஏசய் 6:3, (சங். 139:7-13).

5) யூனிட்டேரியன்கள், யூனிவர்ஸலிஸ்டுகள், சர்ச் ஆப் தி நியூ ஜெருசலேம், கிறிஷ்டியன் சர்ச், கியூக்கர்கள், மோர்மோன்கள், ஷேக்கர்கள், ஏழாம் நாளை ஆசரிப்போர், ஆவியை ஆராதிப்பவர்கள், கிறிஸ்துவ விஞ்ஞானிகள், மாடர்னிஸ்டுகள் முதலானவர்கள் சொல்லுகிறபடி தேவன் திரித்துவமானவர் அல்ல என்ற வாதத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். (யோவான் 3:36, 5:23, 1 யோவா 5:12).

6) ஆர்மோனியன்கள், யூனிட்டேரியன்கள், சர்ச் ஆப் தி நியூ எருசலேத்தை கிரிஸ்டியன் சர்ச் என்ற சபை, கியாக்கர்கள், மோர்மோன்கள், சேக்கர்கள் ஏழாம் நாளை ஆசரிப்போர், ஆவியை ஆராதிப்பவர்கள், ருஷ்ஷலிட்ஸ்கள், கிறிஸ்தவ விஞ்ஞானிகள், மாடர்னிஷ்டுகள், லாட்ஜரி சபை முதலானவர்கள் சொல்லுகிறபடி குமாரனாகிய கிறிஸ்து, பிதா மற்றும் பரிசுத்த ஆவியானவர் இம்மூவரும் தெய்வீகத் தன்மை வாய்ந்தவர்கள் இல்லை. அவர்களைப் போல் உண்மையான தேவன் இல்லை என்ற வாதத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யோவான் 10:30, யோவான் 14:9, யோவான் 20:28, 1 யோவான் 5:20, யோவான் 5:23, 1 யோவான் 2:23.

7) ஆர்மோனியன்கள், யூனிட்டேரியன்கள், யூனவர்ஸலிஸ்டுகள் சபை, காம்பேலைட்கள், கியுக்கர்கள், மோர்மோன்கள், சேக்கர்கள், ஏழாம் நாளை ஆசரிப்போர், ஆவியை ஆராதிப்பவர்கள், கிறிஸ்தவ விஞ்ஞானிகள், மாடர்னிஷ்டுகள், சுதந்திரவாதிகள் முதலானவர்கள் சொல்லுகிறபடி பரிசுத்த ஆவியானவர், பிதா, மற்றும் குமாரன் தெய்வீகத் தன்மை உடையவர்கள் இல்லை, அவர்கள் உண்மையான தேவன் அல்ல என்ற அவர்களுடைய வாதத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். அப். 5:3-4; 1 கொரி. 3:16, 2 கொரி. 13:13.

8) ஈஸ்ட்டரன் ஆர்தோடக்ஸ்சர்ச், இர்விங்னைட்ஸ், பழைய கத்தோலிக்கள், மோராவியன் பிரதர்ஸ், சொல்லுகிறபடி பரிசுத்த ஆவியானவர் பிதாவினிடத்திலிருந்து ஆகட்டும், குமாரனிடத்திலிருந்து ஆகட்டும் வந்தவர் அல்ல என்ற வாதத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

யோவான் 15:26, கலாத் 4:6, யோவான் 16:14-15.

***கவனிக்கவும் :*** இந்த புதிய நவீன வாதங்கள் அல்லது உதாரண வாதங்கள், பரிசுத்த வேதாகமத்தை நம்பாத நவீன வாதிகளாக இருந்து அவர்களுடைய குருட்டு நம்பிக்கையை அனுசரிக்கிறார்கள். அதே மாதிரி செக்டேரியன் சபை ஜனங்கள் கூட இந்நாட்களில் இப்படிப்பட்ட நவீன வாதங்களால் நிறம் போயிருக்கிறார்கள். அவர்கள் தப்பு நவீனதாயிருக்கிறது. ஆனால் அது எவ்வளவோ பழைமை வாய்ந்தது.

## 4 தேவ தூதர்களைக் குறித்த உபதேசம்

## DOCTRINE OF ANGELS

**இங்கே கீழ்கண்ட விஷயங்களை நாங்கள் விசுவாசிக்கின்றோம்.**

அ) கண்ணுக்கு தெரியாத மிக பிரதானமான மிக முக்யமான தேவ தூதர்கள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். சங். 103:20-21.

கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே அவரை ஸ்தோத்திரியுங்கள்.

கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து அவர் பணிவிடைக் காரராயிருக்கிற அவருடைய சர்வ சேனைகளே அவரை ஸ்தோத்திரியுங்கள்.

ஆ) நித்தமும் தேவனை துதித்துக் கொண்டு தேவனுடைய கட்டளையை நிறைவேற்றி மானிட சமூகத்திற்கு சேவை செய்கிற தேவ தூதர்கள் எப்பொழுதும் மிகப் பெரிய சக்தியுடையவர்களாய், ஆனந்தத்தோடு, உறுதி செய்யப்பட்ட ஆசீர்வாதத்தோடு இருக்கிறார்கள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். எபி. 1:14. இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா? மத். 25:31 அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்.

சங். 91:11-12.

இ) கெட்ட தேவதூதர்கள் விழுந்துபோன ஆவிகளைப்போல் முடிவு வரைக்கும் நிராகரிக்கப்பட்டு, தேவனுக்கும், மனுஷர்களுக்கும் சத்ருவாக பிரகடணம் செய்யப்பட்டு காரியங்களை நாசம் செய்வதற்கு பிரயத்தனம் பண்ணுகிறவைகள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். யூதா 6 -

தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத் தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்.

எபேசி. 6:12, வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.

1 பேதுரு 5:8 - ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசனவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றி திரிகிறான்.

## <u>வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத இந்த கிழ்கண்ட உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.</u>

1) சர்ச் ஆப் தி எருசலேம் சபைகள், ஆவியை ஆராதிப்பவர்கள், சொல்லுகிறபடி தேவ தூதர்கள் மரித்துப்போனவர்களின் ஆவி என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யோவான் 8:44, (மத்தேயு 22:30).

2) மோர்மோன்கள், ஆவியை ஆராதிப்பவர்கள், சொல்லுகிறபடி மரித்துப்போய் உன்னத ஸ்தானத்திற்கு எழுப்பப்பட்டவர்களுடைய ஆவியே நல்ல தேவ தூதர்கள் என்றும் மற்றும் அசுத்தமான மற்றும் சந்தோஷமின்றி மரித்துப் போனவர்கள் ஆவியே கெட்ட தேவ தூதர்கள் என்ற அவர்களுடைய வாதத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத். 25:41, 1 பேதுரு 5:8, யூதா 6, 2 பேதுரு 2:4, (வெளி. 12:7-8).

3) மோர்மோன்கள், சேக்கர்கள் சொல்லுகிறபடி தேவ தூதர்கள் ஆண்-பெண் பாகுபாடு உடையவர்கள் என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

4) கிறிஸ்தவ விஞ்ஞானிகள் சொல்லுகிறபடி தேவனிடத்திலிருந்து மனுஷருக்கு வருகின்ற ஆலோசனைகள், மற்றும் தகவல்களே தேவ தூதர்கள் என்ற அவர்கள் வாதத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

5) யூனிட்டேரியன்கள், யூனிவர்ஸலிஸ்டுகள், சர்ச் ஆப் தி எருசலேம், ஆவியை ஆராதிப்பவர்கள், கிறிஸ்தவ விஞ்ஞானிகள் சொல்லுகிறபடி தனிப்பட்ட துன்மார்க்கமான ஆவிகள் இல்லை என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

***கவனிக்கவும் :*** மாடர்னிஸ்டுகள் எல்லாம் தனிப்பட்ட துன்மார்க்கமான ஆவிகள் உய்யப் போராட்ட தடை அங்கீகரிக்காமல் துன்மார்க்கமான ஆவிகள் என்பது கேவலம் துன்மார்க்கத்திற்கு மாத்திரமே அடையாளம் என்று சொல்லுகிறார்கள்.

## <u>5. சிருஷ்டிப்பை பற்றின உபதேசம்</u>

## <u>DECTRINE OF CREATION</u>

### <u>இந்த கீழ்கண்ட விஷயங்களை நாங்கள் விசுவாசிக்கின்றோம்.</u>

அ) தேவன் பரலோகத்தை, பூமியை தன் வல்லமை மிகுந்த வார்த்தையின்மூலம் ஆறு நாட்களில் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற காலத்தின்படி ஒரு ஒழுங்கான முறையில் சிருஷ்டித்தார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

ஆ) தேவன் எவ்வளவோ நல்லவிதமாக உலகத்தை சிருஷ்டித்தபோது அதற்கு சாட்சியாக எந்த மனுஷனும் இல்லாததிருந்தபடியால் சிருஷ்டிப்புக்கு சம்மந்தப்பட்ட விஷயத்திற்கு நாம் கேவலம் பரிசுத்த வேதாகமத்தில் தேவன் மூலமாய் எழுதப்பட்ட இந்த அறிக்கை மீதே நாம் ஆதாரப்பட வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

***கவனிக்கவும் :*** மேற்சொன்ன இரண்டு விஷயத்திற்குக் கீழ்கண்ட வாக்கிய பாகத்தை பார்க்கவும். ஆதி. 1:1, 1:31, யாத் 20:1

எபி 11:3 விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும் இவ்விதமாய், காணப்படுகிறவைகள், தோன்றப்படுகிறவைகளினால் உண்டாகவில்லை என்றும் அறிந்திருக்கிறோம்.

சங். 115:3 - நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார் தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார். கொலே 1:16 - ஏனென்றால் அவருக்குள் எல்லாம் சிருஷ்டிக்கப்பட்டது பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலனும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

## வேதாகமத்தின் புறம்பான எல்லா உபதேசங்களையும் நாங்கள் ஏற்க மறுக்கிறோம்

ஜீவிய பரிமாண பாரம்பியயல் சித்தாந்தர்கள் சொல்லியபடி உலகமும், அதிலுள்ளவைகள் அனைத்தும் ஜீவிய பரிமானத்தின் பிரகாரம் காலத்திற்கேற்றவாறு ஒன்றிலிருந்து மற்றொன்று உற்பத்தியாகி வியாபித்தது என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மற்றும் தேவ சிருஷ்டிப்பைக் குறித்து வேதாகமத்தின்படி இல்லாத அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு உபதேசங்களையும்,

போதனைகளையும், நாங்கள் ஏற்க மறுக்கிறோம். சங். 33:6, யோவான் 1:1-3, சங். 148:5.

***கவனிக்கவும் :*** இந்நாட்களில் அநேக செக்டேரியன் போதகர்கள் ஜீவிய பரிமாண உபதேசங்களை ஒப்புக் கொள்கிறார்கள். ஒரு சிலர் தெய்வீகத் தன்மையுடைய உபதேசத்திற்கு அனுகூலமாயிருக்கிறார்கள். ஆனால் இதுகூட வேதாகமத்தின்படி இருப்பவைகள் அல்ல.

## 6. மனுஷன் மற்றும் தேவனுடைய சாயல் அல்லது ரூபம் குறித்த உபதேசம்

## DOCTRINE OF MAN AND THE IMAGE OF GOD

தேவன் நம்முடைய முற்பிதாக்களை மிருகத்தைப்போல் மற்றும் ஞானமில்லாதவர்களாக, அல்லது பரிபூர்ண வளர்ச்சியடையாதவர்களாக, சிருஷ்டிக்கவில்லை. அவர்களை அவர் தம் சொந்த சாயலில், அவர் ரூபத்தை ஒத்த, உண்மையான தன்னுடைய ஞானத்தோடும், தன்னுடைய சரியான நீதியோடும் மற்றும் பரிசுத்தத்தோடும் மற்றும் உண்மையான இயற்கையான ஞானத்தோடும் சிருஷ்டித்தார் என்று விசுவாசித்து அறிக்கையிடுகிறோம்.

ஆதி. 1:26-27.

எபேசி 4:24 - மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக் கொள்ளுங்கள்

கொலே 3:10 - தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத இந்த கீழ்கண்ட உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1) ரோமன் கத்தோலிக்கச் சபையினர் சொல்லுகிறபடி மனுஷன் சுதந்திரமாகவே தேவனுடைய சாயல் அல்லது ரூபம் இருந்தது. அவனுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் கேவலம் அவனுடைய கோரிக்கைகள்மீது மாத்திரமே என்றும், அது மட்டுமல்லாமல் அவனுக்கு கொடுக்கப்பட்ட சரியான நீதி தேவனுடைய சுய ரூபத்தின் பாகம் இல்லையென்றும் அது தேவனுடைய கூட ஒரு பரிசு என்றும் சொல்கிற அவர்களுடைய வாதத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபேசி 4:24, கொலே 3:10.

2) ரோமன் கத்தோலிக்கச் சபை, யூனிட்டேரியன்கள், ஆர்மேனியன்கள், மாடர்னிஸ்டுகள் சொல்லுகிற வண்ணம் தேவனுடைய ரூபம் என்பது திடமான நீதி மற்றும் பரிசுத்தத்தில் இல்லையென்றும், பூமி மீது உள்ள சகல ஜீவ ராசிகளின் மேல் மனுஷனுக்கு இருக்கிற அதிகாரத்தில் இருக்கிறது என்ற அவர்களுடைய வாதத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். (மேல் கொடுக்கப்பட்ட வாக்கிய குறிப்பை பாருங்கள்).

3) அட்வானிஸ்ட்கள் சொல்லுகிறபடி ஆதாம் பரிபூர்ணமான பரிசுத்தவான் இல்லையென்றாலும் உண்மையாகவே களங்கமில்லாதவன் ஆதி 1:26-27 (மேற்சொன்ன வாக்கியங்களை கவனித்துப் பார்க்கவும்).

4) ருஷ்ஷிடலைட்ஸ்கள், ஜீவிய பரிமாணர்கள், மாடர்னிஷ்டுகள் சொல்லுகிறபடி மனுஷன் தேவனுடைய சாயலில் படைக்கப்படவில்லை மற்றும் மனுஷனுக்கும், மிருகத்திற்கும் இடையே எவ்விதமான தொடர்பும், உறவும் இல்லையென்றும் சொல்லுகிற அவர்களுடைய வாதத்தை

நாங்கள் நிராகரிக்கிறோம்.

5) ரோமக் கத்தோலிக்கச் சபை சொல்லுகிறபடி தேவனுடைய பிரத்யேகமான கிருபை மூலம் மாத்திரமே மனுஷன் சரீர ரூபத்டை பெற முடியும் என்ற வாதத்தை நாங்கள் நிராகரிக்கிறோம். அப். 2:17.

6) யூனிட்டேரியன்கள், ஆர்மேனியன்கள் சொல்லுகிறபடி மனுஷனுடைய சரீரம் ஷேமமாக சிருஷ்டிக்கப்பட்டது என்ற வாதத்தை நாங்கள் நிராகரிக்கிறோம். ரோமர் 5:12, ரோமர் 6:23.

7) ஏழாம் நாளை ஆசரிப்போர் சபையினர் சொல்லுகிறபடி கேவலம் மனுஷன் சரீரமே அல்ல. ஆத்துமாகூட ஷேமமாய் சிருஷ்டிக்கப்பட்டது என்ற வாதத்தை நாங்கள் தள்ளி விடுகிறோம்.

***கவனிக்கவும் :*** தேவனுடைய சாயல் உண்மையான தேவனுடைய ஞானத்தையும், பரிசுத்தத்தையும், மற்றும் நீதியையும் கலந்து உள்ளதாயிருக்கிறது - என்பதே சரியான அர்த்தமாயிருக்கிறது.

## 7 பாவத்தைக் குறித்த உபதேசம்

## DOCTRINE OF SIN

அ) விழுந்துப் போன நம்முடைய முற் பிதாக்களின் மூலம் பாவம் இந்த உலகத்திற்கு வந்தது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

1 யோவான் 3:8 பாவஞ் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்

ஏனெனில் பிசாசனவன் ஆதி முதல் பாவஞ் செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். யாக். 1:13 - தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவர் அல்ல.

ஆ) பாவத்தின்மூலம் கேவலம் நம்முடைய முற்பிதாக்களே அல்லாமல் அவர்களுடைய வாரிசுதாரர்கள்கூட முதன்முதலாக நீதியை இழந்துவிட்டவர்கள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

இ) ஆகவே மனுஷர்கள் எல்லோரும்கூட பாவத்தினால் மரிக்க வேண்டியவர்களாக தேவனுடைய கோபத்திற்கு ஆளாக வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். எபேசி. 2:1-13, ஆதி. 8:21, யோவான் 3:5-7.

ஈ) ஆகவே மனுஷர்கள் தம்முடைய சொந்த சாமார்த்தியத்தின் மூலமாகட்டும் அல்லது தம்முடைய நாகரீகத்தின்மூலமாகட்டும் மரணத்திலிருந்தும் மற்றும் நித்ய அழிவிலிருந்தும் தப்பித்துக் கொண்டு தேவனோடு சமாதான பட முடியாது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ரோமர் 7:18 அதெப்படியெனில் என்னிடத்தில் அதாவது, என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருப்பதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன் நன்மை செய்ய வேண்டுமென்ற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது நன்மை செய்வதோ என்னிடத்தில் இல்லை.

யாக். 2:10, எப்படியெனில் ஒருவன் நியாயப் பிரமாணம் முழுவதும் கை கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலேயும் குற்றவாளியாயிருப்பான். 2 கொரி. 3:5 - எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது.

சங். 130:3 - கர்த்தாவே நீர் அக்கிரமங்களை கவனித்திருப்பீரானால், யார் நிலை நிற்பான், ஆண்டவரே.

உ) ஆனால் மனுஷர்கள் எல்லாரும் உலகத்தினுடைய திவ்ய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவில் உள்ள கிருபை மூலம் விசுவாத்தினால் மட்டுமே நாம் இரட்சிக்கப்பட முடியும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ரோமர் 3:28 - ஆதலால் மனுஷன் நியாயப் பிரமினத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்.

ரோமர் 8:1 - ஆனபடியால் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினை தீர்ப்பு இல்லை.

ரோமர் 5:16-18

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்கண்ட உபதேசத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1) கல்வானிஷ்டுகள் சபையினர் சொல்லுகிறபடி மனுஷனே தன் பாவங்களை ஏற்கும்படி தேவன் மனுஷனை சிருஷ்டித்தார் என்ற போதனையை நாங்கள் நிராகரிக்கிறோம். சங். 5:5, யோவான் 3:16, 1 யோவான் 2:16, (உபாக 32:4, அப். 1:26-27, 5:1-3).

2) ஷேக்கர்கள் மற்றும் கிறிஸ்தவ இஸ்ரவேலர்கள் சொல்லுகிறபடி நம்முடைய முற்பிதாக்கள் செய்த பாவம் பெரிய மீறுதலாக எண்ணப்பட்டு அது தண்டனைக்கு பாத்திரமான கட்டளையாயிருக்கிறதென்ற போதனையை நாங்கள் நிராகரிக்கிறோம். ஆதி. 3:6.

3) சர்ச் ஆப் தி நியு ஜெருசலேம் சபை, மாடர்னிஷ்டுகள் சொல்லுகிறபடி வேதாகமத்தில் எண்ணப்பட்ட மனுஷனுடைய விழுந்து போகுதல் அது உண்மையாகப்பட்ட மனுஷனுடைய விழுந்து போகுதல் அது உண்மையாக சரித்திரப்பூர்வமான நிகழ்ச்சி மட்டுமே அது கேவலம் அலங்காரம் என்ற போதனையை நாங்கள் நிராகரிக்கிறோம். ரோமர் 5:12, 1 கொரி 15:21-22, 1 கொரி 11:3.

4) ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்டரன் ஆர்தோடக்ஸ் சபை சொல்லுகிறபடி முதல் பாவம் மனுஷ ஜாதியினுடைய சுபாவம் முழுமையாக பாழாகவில்லையென்றாலும், கேவலம் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை பெலவீனப்படுத்தி, தேவன் நமக்கு கொடுத்த கிருபை வரங்களை இழந்து போனார்கள் என்ற அவர்களுடைய போதனை கூட நாங்கள் நிராகரிக்கிறோம். யோவா 3:5-6, எபே 2:1, ரோமர் 3:23.

5) ஆர்மேனியன்கள், யூனிட்டேரியன்கள், சர்ச் ஆப் தி நியு ஜெருசலேம் சபை, காம்பேலைட்கள், அட்வன்டிஸ்டுகள், மாடர்னிஸ்டுகள், முதலானவர்கள் சொல்லுகிறபடி பாவம் என்பது இல்லையென்றும், மற்றும் மனுஷனுடைய சுபாவம் பரிபூரணமாக அந்த முதல் பாவத்தின் மூலம் கெட்டுக் போகவில்லை, அழிந்து போக பண்ணவில்லையென்ற அவர்களுடைய போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ரோமர் 7:18, அப். 8:21, ரோமர் 5:12, சங்.14:1, மத். 7:17-18, எபேசி 4:22.

6) கிறிஸ்தவ விஞ்ஞானிகள் சொல்லுகிறபடி அசல் பாவம் என்பதற்கு அர்த்தமேயில்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

7) ரோமன் கத்தோலிக்கச் சபையினர் சொல்லுகிறபடி குரோத மத

வைராக்கியம் சரீர வாஞ்சைகள் பாவத்திலிருந்து உற்பத்தியானவைகள் அல்ல என்ற அவர்கள் போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ரோம 7:7, கலாத் 5:17, யாக். 1:15.

8) ரோமன் கத்தோலிக்கச் சபையினர் சொல்லுகிறபடி மரியம்மா பாவத்தில் கர்ப்பமாகி பிறக்கவில்லையென்ற அவர்கள் போதனையை நாங்கள் நிராகரிக்கிறோம். யோவான் 3:6, யோபு 14:4, லூக். 1:46-47.

9) ஆர் மேனியன்கள், யூனிட்டேரியன்கள், யூனிவர்ஸலிஸ்டுகள், சர்ச் ஆப் தி ஜெருசலேம் சபை, கியூக்கர்கள், மோரோமோன்கள், சேக்கர்கள், மென்னோனைட்கள், ஏழாம் நாளை ஆசரிப்போர், மாடர்னிஸ்டுகள், முதலானவர்கள் சொல்லுகிறபடி ஆதாமுடைய பாவக் காரணத்தினால் மனுஷன் தேவனுடைய கோபத்திற்கு, சாபத்திற்கு ஆளாகவில்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபேசி 2:3, அப். 2:17, ரோ. 5:17.

10) ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்டரன் ஆர்தோடக்ஸ் சபை, ஆர்மேனியன்கள், சாக்னியன்ஸ் முதலானவர்கள் சொல்லுகிறபடி ஒரு சில பாவங்கள் தனக்குத் தானே மறைந்து போகும் மற்றும் ஒரு சிலது அழியாமல் இருக்கும் என்ற அவர்கள் போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யாக். 2:10, கலாத். 3:10, மத். 5:18-19, யோவா. 18:20.

11) யூனிட்டேரியன்கள், காம்பேலைட்கள், ஆர்மேனியன்கள், மோர்மோன்கள், அட்வன்ட்டிஸ்டுகள், சுதந்திர ஞானஸ்ஞானம் கொடுப்பவர்கள், மென்னோனைட்ஸ், மாடர்னிஸ்டுகள் சொல்லுகிறபடி சிறிய குழந்தை களிடத்தில் பாவம் இல்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். அப்.6:5, சங். 58:3, சங். 51:5, ஏசய் 48:8.

12) ரோமன் கத்தோலிக்கச் சபையினர் சொல்லுகிறபடி சில பாவத்திற்கு நித்யத்துவம் இல்லாமல் தற்காலிகமாக இந்த உலகத்தில் தண்டனை கொடுக்கப்படும் என்ற அவர்கள் போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். உபா 27:26, கலாத் 3:10, மத். 12:36.

13) ரோமன் கத்தோலிக்கச் சபை, ஆர்மேனியன்கள், யூனிட்டேரியன்கள், சர்ச் ஆப் தி நியூ ஜெருசலேம் சபை, மெதடிஸ்டுகள், கியூக்கர்கள், சேக்கர்கள், ஏழாம்நாளை ஆசிரிப்போர், ஆவியை ஆராதிப்பவர்கள், ஈஸ்ட்டரன் ஆர்தோடக்ஸ் சபை, காம்பேலைட்ஸ்கள், மென்னோனைட்கள், சுதந்திரமாக ஞானஸ்ஞானம் கொடுப்பவர்கள், மோரோ வியன்கள், முதலான சபையினர் சொல்லுகிறபடி மனுஷன் விழுந்து போனாலும் அவன் தன் சொந்த சுதந்திர சித்தத்தை திரும்ப பெற்று, சிறிது நல்லது செய்வதற்கு அருகதையை உடையவனாயிருக்கிறான் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 2 கொரி 3:5, எபேசி 2:1, ரோமர் 3:11-12, ரோமர் 7:18.

***கவனிக்கவும் :*** இந்நாட்களில் பொதுவான பாவனையோடு கெட்டுப் போன மாடர்னிஸ்டுகள், செக்டோரியன்கள், சபையினர் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் பாவத்தை தள்ளி விடுகிறார்கள். மற்றும் மாடர்ன் உபதேசங்களைக்கூட இந்த வேதாகம அடிப்படையில் கூட தள்ளி விடுகிறார்கள்.

## 8. கிருபையின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுத்தல் அல்லது முன் கூட்டியே தீர்மானித்தல் பற்றின உபதேசம்

## DOCTRINE OF THE ELECTION OF GRACE OR PREDESTINATION.

அ) கிருபையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுதல் அல்லது இரட்சிப்பின் நிமித்தம் முன் கூட்டியே தீர்மானித்தல் என்பதை நாம் விசுவாசிக்கிறோம். ஆனால் கோபத்தின் நிமித்தம் தேர்ந்தெடுக்கப்படுதல் அல்லது தண்டிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்படுதலை அல்லது முன் கூட்டியே நிர்ணயிக்கப்படுதலை அல்லது முன்கூட்டியே நிர்ணயிக்கப்படுதல் என்பதை நாங்கள் நிராகரிக்கிறோம். ரோமர் 11:5-6 - அப்படிப்போல இக்காலத்திலேயும் கிருபையினால் உண்டாகும் தெரிந்து கொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாயிருக்கிறது.

அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது அப்படியல்லவென்றால், கிருபையானது கிருபையல்லவே, அன்றியும் அது கிரியைகளினால் உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது அப்படியல்லவென்றால், கிரியையானது கிரியையல்லவே.

ரோமர் 8:28-30 - அன்றியும் அவர் தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற் பேரானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன் குறித்தாரோ அவர்களை தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்.

(2 பேது 3:9, யோவான் 3:16, உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்).

ஆ. தேவனுடைய கிருபையின் மூலமும், மற்றும் கிறிஸ்துவினுடைய நற்கிரியைகளின் மூலமே அல்லாமல் வேறு எந்த காரணத்தினாலும்

நாம் நித்யத்திற்காக இரட்சிப்பை பெறுகிறோம் என்ற ஒவ்வொரு உபதேசத்தையும் கூட நாம் நிராகரிக்கிறோம். ஆனால் முன்பே நம்மை தேர்ந்தெடுப்பதற்கு தேவையான காரணம் நாம் இரட்சிப்பை பெற்று மற்றும் தொடர்ந்து செய்யப் போகின்ற நற்கிரியைகள், சரியான குணம், நிச்சயத்துடன் கூடிய நம் விசுவாசம் நம்மை காப்பாற்றி கொள்ளக்கூடும் அவர் முன்பே தெரிந்திருக்கிறோம். ஆகவே

ரோமர் 9:11-12, 18.

பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலும் இருக்கையில், தேவனுடைய தெரிந்து கொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலை நிற்காமல் அழைக்கிறவறாலே நிலை நிற்கும்படிக்கு

மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ் செய்வான் என்று அவளுடனே சொல்லப்பட்டது.

(பிரயாசப்படுகிற நம்மால் முடியாது. ஆனால் கருணைக் காட்டுகிற தேவனாலே ஆகும்).

2 தீமோ 1:9. அவர் நம்முடைய கிரியைகளின்படி நன்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். (ரோமர் 8:29-30, எபே 1:3-5 கூட ஒப்பிட்டுப் பார்க்கவும்).

இ) யாரும் அழிந்து போகக் கூடாதென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது

மற்றும் இந்த பாவ உலகத்திற்காக அவருடைய அன்பு சர்வத்திற்கும் கிறிஸ்துவினுடைய இரட்சிப்பு பிரதி ஒவ்வொருவருக்கும் என்பது நாங்கள் விசுவாசிக்கிறோம்.

யோவான் 3:16-17.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்ய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படிக்கு தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

மத். 23:37 - எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளை கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களை கல்லெறிகிறவளே கோழி தன் குஞ்சுகளை தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன் உங்களுக்கோ மனதில்லாமற் போய்விட்டது.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1) கல்வானிஷ்டுகள், பாப்டிஸ்டுகள், கல்வானிஷ்டு மெதடிஸ்டுக்கள் சொல்லுகிறபடி தேவனுடைய இரட்சிப்பு கிருபை என்பது சர்வ ஜனத்திற்கும் அல்ல கேவலம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மாத்திரமே என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ரோம 11:32, ரோ. 3:19, மேற்சொன்ன வாக்கியப் பகுதிகளைப் பாருங்கள்.

2) ஆர்மேனியன்கள், கேம்லைட்கள், ஈஸ்ட்டரன் ஆர்தொடெக்ஸ் சபை சுதந்திரமாய் ஞானஸ்நானம் கொடுப்பவர்கள் செக்டோரியன், சபை முதலானவர்கள் சொல்லுகிறபடி கிருபையின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுதல் என்பது மனுஷனுடைய நல்ல நடக்கையின்மீது ஆதாயப்பட்டு இருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ரோமர் 11-5-6 - எபே. 13-6 2 திமக் 1-9 - ரோமர் 9-11.

3) ஆர்மோனியன்கள், யூனிட்டேரியன்கள், ஷேக்கர்கள், மெதடிஸ்டுகள், கம்பார்லெண்ட் பிரஸ்பைட்டிரியன்கள், சால்வேஷன் ஆர்மி முதலானவர்கள் சொல்லுகிறபடி கிருபையின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுதல் என்பது நித்யத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது அல்ல, காலத்திற்கேற்றவாறு அது நடக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம் 2 தீமோ 1:9, ரோமர் 9:11, எபே. 1:3-5.

4) யூனிட்டேரியன்கள், சர்ச் ஆப் தி நியூ ஜெருசலேம், மோர்மோன்கள், ஆரிமேனியன்கள் மற்றும் ஒரு சிலர் மாடர்னிஸ்டுகள் சபையினர் சொல்லுகிறபடி அசல் கிருபை மூலம் தேர்ந்தெடுக்கப்படுதல் என்பது இல்லை. ஆயினும் கேவலம் மனுஷன் தனக்குத் தானே தன் தெரிந்தெடுத்தலை மற்றும் இரட்சிப்பை கண்டு கொள்ள வேண்டியிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 2 தீமோ 1:9, ரோமர் 9:11, எபே. 1:3-5.

5) காங்கிரிகேஷனல் கிரிஸ்டியன்ஸ், பிரஸ்பைடிரியன்கள், கல்வானிஸ்டுகள், பாப்டிஸ்டுகள், கல்வானிஸ்டு மெதடிஸ்டுகள் முதலானவர்கள் சொல்லுகிறபடி தெரிந்தெடுத்தல் என்பது அவ்வளவு கேவலம் கிருபையிலிருந்தே வராமல் மற்றும் கிறிஸ்துவின் பாவ பிராய சித்த செய்கையின் நிமித்தம் இல்லாமல்

கேவலம் பிதாவாகிய தேவன்மீது ஆதாரப்பட்ட காரியமாயிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபேசி 1:3-6, 2 தீமோ 1:9.

6) காங்கிர்கேஷனல் கிரிஷ்டியன்கள், பிரஸ்பைடிரியன்கள், கல்வானிஷ்ட் பாப்டிஸ்டுகள், கல்வானிஸ்டு மெதடிஸ்டுகள், முதலானவர்கள் சொல்லுகிறபடி தெரிந்தெடுத்தல் என்பது அவ்வளவாய் கிருபையிலிருந்து வராது கடினப் பாவத்தின் நிமித்தம் இல்லாமல் விசுவாசத்தை இழந்தவர்களுக்குக்கூட இந்த தெரிந்தெடுத்தல் இல்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். சங். 51:10-13, மத். 26:69, 2 சாமு. 12:1-13, சங். 37:24, யோவா. 20:25, 29.

7) ரோமன் கத்தோலிக்கச் சபையினர் சொல்லுகிறபடி கிருபையின்மூலம் தெரிந்தெடுக்கப்படுவது என்பது கிறிஸ்துவின்மேல் வைக்கிற விசுவாசத்தினால் மாத்திரம் அல்லாமல் அவர்களுக்கு இரட்சிப்பு கொடுக்கும் என்று உறுதியாக சொல்லப்படவில்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ரோமர் 8:38-39, 2 தீமோ 1:12, பிலிப் 1:6, லூக். 10:20, 1 தெச 1:4, 1 பேதுரு 5:12, 2 பேது 1:10.

8) கல்வானிஸ்டு சபை, ரியார்ம்டு பிரஸ் பைடிரியன்கள், கல்வானிஸ்டுகள், கல்வானிஸ்டு பாப்டிஸ்டுகள், கல்வானிஸ்டு மெதடிஸ்டுகள், காங்கிரிகேஷனல் கிரிஸ்டியன்கள், மற்றும் ஹோசியா முதலானவர்கள் சொல்லுகிறபடி துன்மார்க்கள் தப்பி போவது என்பது அவர்களுடைய பாவம் மற்றும் அவ்விசுவாத்தினை சார்ந்து இல்லாமல், அப்படிப்பட்டவர்கள் தன்னுடைய கிருபைக்குள்ளே, இரட்சிப்புக்குள் வராமல் தேவனே தன்னுடைய சட்டத்தின்மூலம் அவர்களை தூரப்படுத்துகிறார் என்ற

போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ஓசியா 5:9, லூக்கா 14:16-24, கலாத் 5:4, எசேக் 18:26, 1 தீமே 1:19.

9) கடைசியாக சர்வ ஜனத்திற்கும் கிருபை என்பதை ஒப்புக் கொள்ளாத கல்வானிஸ்டுகள் உபதேசம், கிருபையினால் மாத்திரமே இரட்சிப்பு என்பதை ஒப்புக் கொள்ளாத பிரதி சேனொர்ஜின்களின் உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 தீமோ 2:4, 2 பேதுரு 3:9, ரோமர் 3:20-28.

***கவனிக்கவும் :*** இந்நாட்களில் அநேக மாடர்னிஸ்டுகள், கூட கிறிஸ்துவினுடைய தெய்வீகத்தன்மை, பிரயாசித்தம், விசுவாசத்தின்மூலம் இரட்சிப்பு மற்றும் கிருபையின்மூலம் தெரிந்தெடுக்கப்படுதல் முதலான வார்த்தைகளை பயன்படுத்துகிறார்கள், ஆனால் அவர்களுடைய உபதேசத்திற்கு தகுந்த வண்ணமாக அவைகளை மாற்றிக் கொள்ளுகிறார்கள்.

## 9 <u>தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்த உபதேசம்</u>

## <u>DOCTRINE OF CHRIST THE SON OF GOD</u>

அ) தேவனுடைய குமாரன் மனுஷனுடைய சுபாவத்தையும் தரித்துக் கொண்டு கிருபை பெற்ற கன்னி மரியாள் கர்ப்பத்தில் உற்பவித்து பிறந்தார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ஒரே தனிப்பட்ட மனுஷனிடத்தில் ரெண்டு சுபாவங்கள் எப்படியென்றால் தெய்வீகத் தன்மை மற்றும் மனுஷனுடைய சுபாவத் தன்மை இரண்டும் கலந்தவராக கிறிஸ்து இயேசு பிறந்தார். ஒரே கிறிஸ்துவில் உண்மையான தெய்வத் தன்மையும், மற்றும் மனிதத்

தன்மையுடையவராய் மெய்யான கடவுளாகவும், மெய்யான மனுஷனாகவும் கன்னி மரியாளுக்கு பிறந்தார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

ரோமர் 9:5. பிதாக்கள் அவர்களுடையவர்களே மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன். ஆமென்.

1 தீமோ 2:5-6 - தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே.

எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது.

யோவான் 1:14. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும், நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார் அவருடைய மகிமையைக் கண்டோம் அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

1 யோவான் 5:20. அன்றியும் நாம் சத்தியமுள்ளவரை அறிந்து கொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியை தந்திருக்கிறாரென்றும் அறிவோம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம் இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார். (யோவா 20:28, எரே 23:6, யோவா 5:23, மத். 1:21, 1 தீமோ 3:15, 1 கொரி 15:47, ஐ கூட ஒப்பிட்டுப் பார்க்கவும்).

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1. யூனிட்டேரியன்கள், சர்ச் ஆப் தி நியூ ஜெருசலேம் சபை, கியூக்கர்கள், மோர்மோன்கள், ஷேக்கர்கள், ஏழாம் நாளை ஆசரிப்போர் சபை, ஆவியை ஆராதிப்பவர்கள், கிறிஸ்தவ விஞ்ஞானிகள், மாடர்னிஸ்டுகள் முதலானவர்கள் சொல்லுகிறபடி நித்தியத்துவத்தில் தேவனுடைய குமாரன் அதாவது திரித்துவத்தில் இரண்டாவது ஆள் நசரேயனாக இந்த உலகத்திற்கு வரவில்லை என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபி 2:14, எபி 4:15, கலாத் 4:6-5, 1 தீமோ 2:5, யோவா 1:14, மத். 16:13, 16.

2. மென்னோனைட்கள் சொல்லுகிறபடி தேவனுடைய குமாரன் கன்னி மரியாளுக்கு பிறந்ததின்மூலம் அவருக்கு மனுஷனுடைய சுபாவம் வரவில்லை. அந்த மனுஷனுடைய சுபாவம் என்பது பிதாவினிடத்திலிருந்து சுபாவ சித்தமாக வந்தது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபி. 2:16-17, ரோமர் 1:13, எபேசி 5:30, லூக்கா 1:42.

3. ஏழாம் நாளை ஆசரிப்போர் சபை சொல்லுகிறபடி கிறிஸ்துவுக்கு ஒரே ஒரு சுபாவம் இருக்கிறது. அது கேவலம் தேவனுடைய குமாரன் சுபாவம் மாத்திரமே இருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யோவா 1:14, 1 யோவா 4:2-3, 1 தீமோ 3:16.

4. யூனிட்டேரியன்கள், ரெஸ்ஸோலைட்கள், யூனிவர்ஸலிஸ்டுகள், மாடர்னிஸ்டுகள் சொல்லுகிறபடி கிறிஸ்துவுக்கு ஒரே சுபாவம் இருக்கிறது

அது கேவலம் மனுஷனுடைய சுபாவத் தன்மை மாத்திரமே இருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 தீமோ 3:16, யோவா 1:14.

5. மோர்மோன்கள் மற்றும் மாடர்னிஸ்டுகள் சொல்லுகிறபடி கிறிஸ்துவிலே இரண்டு சுபாவத் தன்மை இல்லை ஏனென்றால் தெய்வீக சுபாவத் தன்மைக்கு, மனுஷனுடைய சுபாவத் தன்மைக்கு வித்தியாசம் இல்லையென்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 தீமோ 3:16, யோ 1:14, கொலே 2:9.

6. சுவாவ் பெல்டியன்ஸ் சொல்லுகிறபடி கிறிஸ்துவில் இரண்டு சுபாவம் இல்லை ஏனென்றால் தெய்வீகத்தில் இரண்டும்கூட கலந்ததாயிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத். 16:13, 16, 1 தீமோ 2:5-6.

7. கல்வானிஸ்டு சபையினர் சொல்லுகிறபடி பரமேறின பிறகு கிறிஸ்துவுக்கு கேவலம் தெய்வீகத் தன்மை மாத்திரமே இருந்தது. மனுஷ சுபாவத் தன்மை மறைந்து போனது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யோவான் 1:14, 1 கொரி 8:6, 1 தீமோ 3:16, கொலே 2:9, 2 கொரி. 5:19.

8. கல்வானிஷ்டு சபையினர் சொல்லுகிறபடி இரண்டு சுபாவத் தன்மை வியாபித்து இருக்கிறது

என்பது உண்மை இல்லை. கேவலம் மனுஷனே தேவன் மற்றும் மனுஷன் என்று அலங்கார பிராகரமாக சொல்லப்படுகிறது என்ற

போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். லூக். 1:35 1 கொரி 15:47, மத் 16:16, ரோமர் 9:5.

9. கல்வானிஷ்டு சபையினர் சொல்லுகிறபடி இரண்டு சுபாவ குணங்கள் கலந்துள்ளதாயிருக்கிறது என்பது கேவலம் பேருக்கு மாத்திரமே என்றும், அது உண்மை இல்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 பேது 3:18,22, அப். 20:28, ரோமர் 8:32.

10. காங்கிரிகேஷனல் கிரிஸ்டியன் சபை, ஆர்மோனியன்கள், யூனிட்டேர்யன்கள், யூனிவர்ஸலிஸ்டுகள், சர்ச் ஆப் தி நியூ ஜெருசலேம் சபை, கியூக்கர்கள், மோர்மோன்கள், சேக்கர்கள், ஏழாம் நாளை ஆசரிப்போர், ஆவியை ஆராதிப்பவர்கள், ரெஸ்ஸோல்ட்ஸ்கள், கிறிஸ்தவ விஞ்ஞானிகள், மாடர்னிஸ்டுகள், சுதந்திர வாதிகள் முதலானவர்கள் சொல்லுகிறபடி மனுஷனுடைய சுபாவ பிரகாரம் கிறிஸ்துவுக்கு உண்மையாக தெய்வீகத் தன்மை பூர்த்தியாக இல்லை கேவலம் ஒரு சில வரங்கள் மற்றும் எல்லைக்குட்பட்ட சக்தி மாத்திரமே இருந்தது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

யோவா 1:14, யோவா 2:11, மத் 28:18, சங் 2:8, கொலே 2:3, எபே 4:10, பிலிப் 2:9, யோவா 5:26-27.

11. இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல், கல்வானிஷ்டுகள், முதலானவர்கள் சொல்லுகிறபடி கிறிஸ்துவினுடைய பரமேறுதல் எச்சரிப்புக்கு பிறகு மாத்திரமே கிறிஸ்துவினுடைய மனுஷுக சுபாவத் தன்மை, மகிமையை கனத்தை தரித்துக் கொண்டது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

12. மோர்மோன்கள் சொல்லுகிறபடி ஞானஸ்ஞானத்திற்குப் பிறகு மாத்திரமே கிறிஸ்து பரிபூர்ணமான தேவத்துவத்தை, கனத்தை, மகியை பெற்றார் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யோவா 1:14, கொலே 2:9, 1 யோ. 4:2-3.

13. யூனிட்டேரியன்கள், யூனிவர்ஸலிஸ்டுகள், சேக்கர்கள், சுதந்திர வாதிகள், முதலானவர்கள் சொல்லுகிறபடி இயேசு கிறிஸ்து தம்முடைய மனுஷுகத்தில் மெய்யாக தேவத்துவத்துவத்தை உடையவராய் இல்லை. ஆனால் நாம் அவரை தேவனாக ஆராதிக்க வேண்டும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யோ. 5:33, ரோ. 14:10-11.

14. ஆர்மோனியன்கள், மாடர்னிஸ்டுகள், சொல்லுகிறபடி இயேசு கிறிஸ்து ஒரு மத்தியஸ்தராக மற்றும் இரட்சகராக மகிமையுள்ளவராக, கனமுள்ளவராயிருந்து தேவாதி தேவனுடைய தரப்பில் வந்த ஒரு தேவனுடைய கீழ்தரப்பட்டவர் மாத்திரமே என்ற போதனையை நாங்கள் தள்ளி விடுகிறோம். யோ. 5:23.

15. கல்வானிஷ்டு சபையினர் சொல்லுகிறபடி கிறிஸ்துவினுடைய இரண்டு சுபாவத்திற்கு சம்மந்தம் எதுவும் இல்லாமலிருப்பதால் கிறிஸ்துவினுடைய ஊழியத்தில் அந்த இரண்டு சுபாவமும் வேறு வேறாக வேலை செய்தது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 தீமோ 2:5, 1 யோ. 3:8, 1 கொரி 15:3, கலாத் 1:4, எபே. 5:2, 25.

16. இர் விங்னைட்ஸ் சபையினர் சொல்லுகிறபடி கிறிஸ்து தன்னுடைய திட்டத்தை கேவலம் ஒரு மனுஷனாக மாத்திரமே பூர்த்தி செய்தார் என்ற வாதத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

17. மோர்மோரியன் சகோதரர்கள், இர்விங்னைட்ஸ் சபையினர் சொல்லுகிறபடி தேவலம் மனிதனுடைய சுபாவத்தை பற்றிய கிறிஸ்து நமக்கு மத்தியஸ்தராக இருந்தார் என்பதை நாங்கள் நிராகரிக்கிறோம். 1 தீமோ 2:5, தீத் 2:13, 1 தீமோ 3:16.

***கவனிக்கவும் :*** கிறிஸ்துவினுடைய மெய்யான தேவ மனுஷ்கத் சுபாவங்களை மனுஷருடைய ஞானத்தினால் அர்த்தம் கற்பிப்பது குற்றம் அது மிகப் பெரிய சாபமாய் பாவமாயிருக்கிறது.

## <u>10. கிறிஸ்துவினுடைய வேலை மற்றும் அலுவல்கள்</u>

## <u>DOCTRINE OF THE CHRIST'S WORK AND OFFICE</u>

அ) இயேசு கிறிஸ்து மெய்யான தேவன் மற்றும் மனுஷனாக மெய்யாய் பாடுபட்டு சிலுவையில் அறையப்பட்டு, மரித்து அடக்கம் செய்யப்பட்டு, நம்மை தேவனோடு சமாதான உடன்படிக்கைச் செய்து மற்றும் நமக்கும் பதிலாக நம் இடத்தில் ஜீவதார பலியாகி, நம்முடைய ஜென்ம கர்ம பாவங்களை அந்த பலியின்மூலம் பரிகரித்தார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். கலாத் 4:4-5, ஏசய் 53:4-5, 1 பேதுரு 2:24.

ஆ) அவர் பாதாளத்தில் இறங்கி மெய்யாய் மூன்றாம் நாளில் திரும்பவும் உயிரோடு எழுந்தார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.
1 பேது 3:18-19, கொலே 2:15, எபே. 4:9-10,
1 கொரி 15:17, ரோம 4:25.

இ) அதற்குப் பின்பு அவர் பரலோகத்திற்கு ஏறி பிதாவினுடைய வலது

பாரிசத்தில் வீற்றிருந்து நித்ய லோகத்தையும் நித்தமும் ஆளுகை செய்கிறவராய் எல்லாவற்றின் மேலும் சர்வ அதிகாரமுடையவராய் பூமி மீதுள்ள சபைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, நடப்பித்து மற்றும் காப்பாற்றுகிறார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அப் 1:9, சங் 110:1, எபே 1:20-22, யோவா 14:16-17, 1 கொ 6:1.

ஈ) அந்த கிறிஸ்து முடிவிலே திரும்ப வந்து மரித்தோரையும், உயிருள்ளோரையும், நியாயந் தீர்ப்பார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அப். 17:31, 2 கொல் 5:10, 1 தெச 4:16, மத் 25:31, 2 பேது 3:10.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத எல்லா கீழ்கண்ட உபதேசங்களையும் நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1. ஆர்மேனியன்கள், மேமோரியன்கள், சர்ச் ஆப் தி நியூ ஜெருசலேம் சபை, மோர்மோன்கள், மாடர்னிஷ்டுகள், சுதந்திர இஸ்ரவேலர்கள், முதலானவர்கள் சொல்லுகிறபடி கிறிஸ்து நம் நிமித்தம் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றவில்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ரோம 5:19, பிலிப் 2:7-8, கலாத் 4:4-5.

2. காங்கிரிகேஷனல் கிறிஸ்டியன்கள், பிரஸ்பைடிரியன்கள், கல்வானிஷ்டு பாப்டிஸ்டுகள், கல்வானிஸ்டு மெதடிஸ்டுகள், முதலானவர்கள் சொல்லுகிறபடி தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்காகவே கிறிஸ்து நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றினார் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 2 கொரி 5:15-18, யோவா 1:29, 1 தீமோ 4:10, 2 பேது 2:1, தீத் 2:11.

3. ஆர்மோனியன்கள் ரோமன் கத்தோலிக்கச் சபை, மெதடிஸ்டுகள், மென்னோனைடஸ்கள், காம்பேலைட்கள், முதலானவர்கள் சொல்லுகிறபடி கிறிஸ்து இந்த உலகத்திற்கு நியாயப் பிரமானத்தை கொடுக்க வந்தவர் நீதிக்கு சம்மந்தமுடைய புதிய கட்டளையை போதிக்கிறவராய் வந்தார் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

கலாத் 3:24, யோ 5:45, கலாத் 4:4-5, மத் 22:37-40.

4. ரோமன் கத்தோலிக்கச் சபையினர் சொல்லுகிறபடி கிறிஸ்து கேவலம் ஆதி பாவத்தை பிரயாசித்தம் செய்வதற்கு மாத்திரமே வந்து எல்லா மனுஷர்களுடைய ஆதி பாவத்தின் நிமித்தம் நித்ய ஆக்கினையை, தண்டனையை அனுபவித்தார். ஆகவே மனுஷன் ஆதி பாவத்திலிருந்து விடுதலை ஆக்கப்பட்டிருக்கிறான், ஞானஸ்ஞானம் மற்றும் செய்கிற பாவம் எல்லாவற்றிற்கும் அவனே பொறுப்பு ஏற்று பிரயாசித்தம் செய்து கொள்ள வேண்டும். மற்றும் தானே அவைகள் நிமித்தம் இந்த உலகத்தில் தற்காலிகமான தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

எபி. 10:10, 1 பேது 3:18, 1 யோ 2:1-2, ரோ 5:10.

5. கல்வானிஷ்டு சபையினர், காங்கிரிகேஷனல் கிரிஷ்டியன்கள், பிரஸ்பைடிரியன்கள், சொல்லுகிறபடி கிறிஸ்து இந்த போகத்தை தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்காக மாத்திரமே வந்து கேவலம் அவர்களுடைய பாவத்தை பிராயசித்தம் செய்வதற்கு மாத்திரமே மரித்தார் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

2 கொரி 5:15-16, யோ. 1:29, 1 தீமோ 2:5-6, ரோம 8:32, எபி. 2:9, தீத் 2:11, 2 பேது 2:1.

6. ஆர்மேனியன்கள், சொல்லுகிறபடி கிறிஸ்துவினுடைய மரணம் நம்முடைய பாவத்திற்கு சரியான பிராயசித்தம் இல்லை. பிதாவாகிய தேவனே பிரத்யேகமாக கிருபையின் மூலம் நியாயந் தீர்ப்பதின்மூலம் மாத்திரமே அதற்கு சரியான பிரயாசித்தம் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.
ரோம 5:10, யோ 19:30, 1 பேது 2:24.

7. ஏழாம் நாளை ஆசிரிப்போர் சபையினர் சொல்லுகிறபடி கிறிஸ்து இந்த உலகத்தினுடைய சமஸ்த பாவங்களுக்காக பிராயசித்தம் செய்வதற்காகவே வந்தாரே அல்லாமல் அந்த பிராயசித்தம் கேவலம் 1844 பிறகு இருக்கிற விசுவாசிகளுக்கு மாத்திரமே உடையதாயிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபி. 1:3, ரோம 8:34, 1 தீமோ 4:10, தீத் 2:11, 2 பேது 2:1, 1 கொரி 15:57, 1 யோ 1:7.

8. யூனிட்டேரியன்கள், யூனிவர்ஸலிஸ்டுகள், சேக்கர்கள், ஆவியை ஆராதிப்பவர்கள், கிறிஸ்தவ விஞ்ஞானிகள், மாடர்னிஸ்டுகள், முதலானவர்கள் சொல்லுகிறபடி கிறிஸ்து மனுஷருடைய பாவத்திற்காக பிராயசித்தம் செய்யவில்லை. ஆனால் அதைப் போன்ற பிரயாசித்தம் அவசரம் இல்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.
சங். 49:8-9, வெளி 14:13, 5:9, ஏசய் 53:6, ரோ 3:23-26, அப் 4:12, மத் 20:28, 1 தீமோ 2:6, ரோமர் 8:32, 2 கொரி 5:19-21.

9. சால்வேஷன் ஆர்மி, அநேக கல்வானிஷ்டுகள் சொல்லுகிறபடி கிறிஸ்து தம்முடைய மரணத்தின்மூலம் நம்முடைய பாவங்களுக்கு கிரயம் செலுத்தவில்லை என்றாலும், தேவனுடைய அன்பின்மூலம் மாத்திரமே

கடினமான நம் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 2 கொரி 5:14-15, யோ 1:29, 1 யோ 3:8.

10. ரஸ்ஸோலைட்கள் சொல்லுகிறபடி கிறிஸ்து தம்முடைய பாடு, சிரமம், மரணத்தின் மூலம் நம்மை இரட்சிக்கவில்லை, என்றாலும் நம்முடைய கீழ்ப்படிதலாலே நாம் இந்த யுகத்தில் நித்ய ஜீவனை சம்பாதித்துக் கொள்வதற்கு அவகாசம் மாத்திரமே கிறிஸ்து நமக்கு உண்டாக்கி கொடுத்தார் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ஏசய் 53:6, மத் 20:28, யோவா 14:6, லூக் 16:26, 1 யோ 1:7, 1 யோ 2:1-2.

11. ரோமன் கத்தோலிக்கச் சபையினர் மற்றும் ஈஸ்ட்டரன் ஆர்தோடக்ஸ் சபையினர் சொல்லுகிறபடி கேவலம் கிறிஸ்து தேவன் முன்பாக நம்முடைய மத்தியஸ்தர் இல்லை, இன்னும் அநேகம் பேர் பரிசுத்தமான மத்தியஸ்தர்கள் இருக்கிறார்கள். மற்றும் மிக முக்யமாக தேவன் எதிரில் எவ்வளவோ கனம் பொருந்திய கன்னி மரியாள் நம் தரப்பில் மத்தியஸ்தராயிருக்கிறார் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யோ. 14:6, அப். 4:12, 1 தீமோ 2:5.

12. ஷேக்கர்கள் மற்றும் மாடர்னிஸ்டுகள் சொல்லுகிறபடி கேவலம் கிறிஸ்து ஒருவரே இந்த உலகத்திற்கு இரட்சகர் இல்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

யோ. 42:8, ஏசய் 43:11.

13. கல்வானிஷ்டு சபை மற்றும் செகவ்ப்ல்டியன்கள் சொல்லுகிறபடி கிறிஸ்து

முழுமையான மனுஷ சுபாவம் உடையவராய் மற்றும் மரணம் வரைக்கும் இருந்த தெய்வீகச் சுபாவமுடையவராய் இருந்தார் என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

சங். 102:27, யோ 2:11, எபி 1:12-13, எபே 1:20-21.

14. ஆர்மேனியன்கள், இவான்ஜிலிக்கல் காங்கிரி கேஷனல் சபை, காம்பேலைட்கள், இர்விங்கைட்கர், கல்வானிஷ்டுகள் முதலானவர்கள் சொல்லுகிறபடி கிறிஸ்து தம்முடைய மனுஷ சுபாவ காரணத்தினால் தம்முடைய தெய்வீக மதியை தன் பாடுகளில் உபயோகிக்க முடியாமல் போனது. ஆனால் இந்த கனத்திற்கு தன்னுடைய உயிர்த்தெழுதலில் கிறிஸ்து பெற்றார் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யோ. 2:11, யோ. 1:14, 3:13, 11:40, 13:31, 18:3, ஏசய் 9:6-7.

15. ரோமன் கத்தோலிக்கச் சபையினர் சொல்லுகிறபடி சிலுவை பாடுகளில் கிறிஸ்துவினுடைய ஆத்துமா மெய்யாக வேதனைப்படவில்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத். 27:46, 26:38, லூக் 22:12, எபி 2:17-18, 5:7-8.

16. ஆர்மேனியன்கள், யூனிட்டேரியன்கள், யூனிவர்ஸலிஸ்டுகள், மாடர்னிஸ்டுகள், சுதந்திரபுராட்டஸ்டண்ட், இவான்ஜிலிகல் அசோசியேஷன் சபையினர் சொல்லுகிறபடி கிறிஸ்து மெய்யாக தேவனுடைய கோபத்தை பாடுகளை, சிரமங்களை, வேதனைகளை அனுபவிக்கவில்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். கலாத் 3:10-13, ரோ. 6:23, சங் 16:10.

17. ரோமன் கத்தோலிக்கச் சபையினர் மற்றும் ஈஸ்டரன் ஆர்தோடெக்ஸ்

சபையினர் சொல்லுகிறபடி மரணம் வரைக்கும் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திற்கு இறங்கிப் போனது கேவலம் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களை சிறைச் சாலையிலிருந்து விடுதலை செய்வதற்கு என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 பேது. 3:18-19, கொலே 2:15, 1 கொ. 15:55, லூக். 16:23.

18. கல்வானிஷ்டு சபையினர் ஆர்மேனியன்கள், யூனிட்டேரியன்கள், இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல் சபை முதலானவர்கள் சொல்லுகிறபடி அசல் கிறிஸ்து உண்மையாக பாதாளத்திற்கு இறங்கி போகவில்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

19. ரெஸ்ஸோலைட்ஸ்கள், கிறிஸ்தவ விஞ்ஞானிகள், முதலானவர்கள் கிறிஸ்து சரீரப் பிரகாரமாக மரணத்திலிருந்து திரும்பவும் எழும்பவில்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.
யோ. 2:9, 20:17, மத். 17:1, 28:2, சங். 16:9-11.

20. யூனிட்டேரியன்கள் சொல்லுகிறபடி கிறிஸ்துஉயிர்த்தெழுந்து தேவன் மூலம் எச்சரிக்கப்பட்டப் பின்பு மாத்திரமே அவர் புதிய மற்றும் அதற்கு சரி சமமான சரீரத்தை பெற்றார் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். லூக் 24:39, பிலி 2:8-9, அப். 7:55.

21. காங்கிரிகேஷனல் கிறிஷ்டியன்கள் சபை, எஸ்கோபிலியன்கள், பாப்டிஸ்டுகள், மெதடிஸ்டுகள், இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல் சபை, ஆர்மேனியன்கள், யூனிட்டேரியன்கள், ஏழாம் நாளை ஆசரிப்போர் முதலானவர்கள் சொல்லுகிறபடி கிறிஸ்து தம்முடைய பிதாவினுடைய வலது பாரிசத்தில் சரீர சுபாவத்தோடு உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்

என்பது கிறிஸ்துவினுடைய உன்னத மற்றும் சர்வ அதிகாரத்தை, வல்லமையை கனத்தை தெரியப்படுத்தவில்லை, ஆனால் பரலோகத்தில் தன்னுடைய ஸ்தான நிலையை கேவலம் நிலை நிறுத்திக் கொள்வதற்கே என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். சங். 110:1, எபி 1:3, எபே 1:20-23, 1 பேது 3:22.

22. மோர்மோன்கள் சொல்லுகிறபடி கிறிஸ்து தற்போது இந்த பூமியின்மேல் இல்லை ஆயினும் அவர் தரப்பில் பரிசுத்த ஆவியானவர் மாத்திரமே கிரியைச் செய்கிறார் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத். 28:20.

## 11 மாற்றத்தைக் குறித்த உபதேசம்

## DOCTRINE OF CONVERSION

அ) கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பு விசுவாசம் சுபாவ சித்தத்தின்படி எந்த மனுஷனிலிலும் நாம் கண்டு கொள்ள முடியாது, அது மனந்திரும்புதல் மூலம் இலவசமாய் கிடைக்கிற பரிசுத்த ஆவியின் வரம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

1 பேது 1:3-4, யோவ 3:5-6, எபே 2:1, யாக் 1:18, சங் 5:17, 5:12, எரே 31:18, ரோமர் 3:23, ரோ. 7:18.

ஆ) மனந்திரும்புதல் என்பது முழுவதும் அல்லது சிறிது மாத்திரம் இல்லாமல் எந்த ஒரு மனுஷனுடைய கிரியைகளின் மூலமும் நடக்காது சுவிஷேசத்தின் மூலம் பாவிகளை இரட்சிப்பதற்கு கேவலம் கிறிஸ்துவின்

நிமித்தம் தேவனுடைய கிருபையோடும், சக்தியோடும் கூடிய கிரியையாய் அது இருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். 1 கொரி 2:14, எபே 1:19-20, ரோ 10:17.

இ) பரிசுத்த ஆவியானவர் கேவலம் ஒரு சிலரை மாத்திரம் அல்லாமல் சுவிஷேசத்தை கேட்கிற ஒவ்வொருவரையும் மாற்றுவதற்கு வல்லமையை உடையதாயிருக்கிறது. ஆனால் கொஞ்சம் பேர் கேவலம் தன் இருதய கடினத்தின் நிமித்தம் மனந்திரும்பாதிருக்கிறார்கள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மத் 23:37, அப். 7:51.

ஈ) ஆனால் பரிபூர்ணமாக தேவனுடைய கிருபை மாத்திரம் இல்லாமல் மனுஷனுடைய உதவியினாலும் மற்றும் மற்றவர்களைக் காட்டிலும் நல்ல குணாதிசயங்களை உடையவராய், குறைந்த குற்றத்தோடு இருக்கிற எந்த ஒரு மனுஷனாலும் மற்றவர்களிடத்தில் மனந்திரும்புதலை கொண்டு வர முடியும் என்ற செனர்ஜியின்களின் உபதேசத்தை நாங்கள் நிராகரிக்கிறோம்.

1 கொரி 2:14, எபே 4:18, பிலி 2:13, லூக் 19:41-42, ரோ. 3:23, 8:7.

உ) எல்லாரையும் இல்லாமல் கேவலம் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமே தேவன் மனந்திரும்புதல் உண்டாகும்படி செய்வார் என்ற உபதேசத்தைக்கூட நாங்கள் நிராகரிக்கிறோம்.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத அனைத்து உபதேசங்களையும் நாங்கள் ஏற்க மறுக்கிறோம்

1. காம்பெலைட்கள், ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்ட்டரன் ஆர்தோடக்ஸ்

சபை, பிரஸ்பைடிரியன்ஸ்கள், ஆர்மேனியன்கள், யூனிட்டேரியன்கள், சர்ச் ஆப் தி நியு ஜெருசலேம், ஆர்மேனியன்கள், யூனிட்டேரியன்கள், யூனிவர்ஸலிஸ்டுகள், புதிய எருசலேம் சபை, கியூக்கர்கள், மோர்மோன்கள், ஷேக்கர்கள், மென்னோனைட்ஸ் சினரிஜஸ்டுகள், சுதந்திர பாப்டிஸ்டுகள், மெதடிஸ்டுகள், அட்வன்ட்டிஸ்டுகள், மாடர்னிஸ்டுகள் இவான்ஜிலிகல் அசோசேசியன் சபையினர் முதலானவர்கள் சொல்லுகிறபடி மனந்திரும்புதல் என்பது பூரணமாக தேவனுடைய கிருபையின் மேலே ஆதாரப்பட்டிராமல் சிறிது மனுஷ சக்தியின்மீதும் கூட ஆதாரப்பட்டிருக்கிறது என்ற உபதேசத்தை நாம் ஏற்க மறுக்கிறோம். மேற்சொன்ன வாக்யத்தில் பார்க்கவும்.

2. யூனிட்டேரியன்கள், காம்பெலைட்ஸ்கள், மற்றும் பாப்டிஸ்டுகள் சொல்லுகிறபடி சிறிய குழந்தைகள் மனந்திரும்ப முடியாது என்ற உபதேசத்தை நாம் ஏற்க மறுக்கிறோம். மாற் 10:14, மத் 16:6, மத் 18:10-11, ஏசய் 26:9.

3. கல்வானிஸ்டுகள், காம்பெலைட்கள், பிரஸ்பைடிரியன்கள், முதலானவர்கள் சொல்லுகிறபடி தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் ஒரே முறை மனந்திரும்பின பின்னால் தம்முடைய விசுவாசத்தை இழந்து தேவனுடைய கிருபையை இழந்து போக மாட்டார்கள் என்ற உபதேசத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.
கலாத் 4:19, லூக் 8:13.

4. கல்வானிஷ்டு சபையினர் பிரஸ்பைடிரியன்கள், கல்வானிஷ்டு பாப்டிஸ்டு சபையினர், காங்கிரிகேஷனல் கிரிஸ்டியன்கள் முதலானவர்கள் சொல்லுகிறபடி தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் முழுமையாக மற்றும்

பலவந்தமாக கர்த்தரிடத்திற்கு அழைக்கப்படுவதில்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத் 11:28, மாற் 16:15-16, அப் 17:30, மத் 28:19, பிரசங் 1:24, ஏசய் 1:5, 18:20, எசே 33:11.

5. கியூக்கர்கள், பிரஸ்பைடிரியன்கள், ஆர்மேனியன்கள், கல்வானிஷ்டு பாப்டிஸ்டுகள், கல்வானிஷ்டு சபையினர் முதலானவர்கள் சொல்லுகிறபடி மனந்திரும்புதலை பெற்றுக் கொள்வதிலே தேவனுடைய கிருபையை நிராகரிப்பது தடை செய்வது இல்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

ஏசய் 65:2, லூக் 7:30, யோ 5:40, அப் 7:51.

## 12 கிறிஸ்துவில் விசுவாசத்தைக் குறித்த உபதேசம்

## DOCTRINE OF FAITH IN CHRIST

அ) கிறிஸ்துவினுடைய மகோன்னதமான பிரயாசித்தத்தின்மூலம் மனுஷ ஜாதிக்கு தேவனிடத்தில் சமாதானம் உண்டானது. மற்றும் இந்த சமாதானம் மனுஷரெல்லாருக்கும் உலகத்தின் முடிவு வரைக்கும் சுவிஷேசத்தின்மூலம் போதிக்கப்பட்டது. ஆகவே எல்லாரும் இந்த தேவனுடைய நற்செய்தியை விசுவாசிக்க வேண்டும். மற்றும் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொண்டு இரட்சிப்புக்குள் வர வேண்டுமேயானால் கேவலம் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைப்பதின் மூலம் மாத்திரமே அது சாத்யமாகிறது என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம்.

ஆ) கிறிஸ்துவில் விசுவாசம் என்பது நிலையான நம்பிக்கை மற்றும் கிறிஸ்துவின் மூலம் கிடைத்த பாவ மன்னிப்பில் நிலையான பாவ மன்னிப்பின் நிச்சயமாயிருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

மேற்சொன்ன இரண்டு விஷயங்களுக்கும் இந்த கீழ்கண்ட வேதக் குறிப்புக்களை பார்க்கவும். அப் 10:43, யோவா 3:16-17, எபி 11:1, ரோ 4:20-21.

**<u>வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்கண்ட உபதேசங்கள் அனைத்தையும் நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.</u>**

1. ரோமன் கத்தோலிக்கச் சபையினர் சொல்லுகிறபடி விசுவாசம் என்பது சுவிஷேச வாக்கு தத்தத்தில் நிச்சயிக்கப்படாமல் சபையால் போதிக்கிறதை அங்கீகரித்தல் மாத்திரமே என்ற அவர்கள் போதனையை நாங்கள் நிராகரிக்கிறோம். யோ 3:36, ரோ. 4:20-21, 2 தீமோ 1:12, யோ 20:28.

2. ரோமன் கத்தோலிக்கச் சபை மற்றும் யூனிவர்ஸலிஸ்டுகள் சொல்லுகிறபடி இரட்சிக்கிற விசுவாசம் என்பது கிறிஸ்துவில் பாவியினுடைய, பாவத்தின் நிமித்தம் பாவ மன்னிப்பின் நம்பிக்கை ஆகாது, கேவலம் சுவிஷேச சத்தியத்திற்கு சம்மதம் தெரிவிப்பதே என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ரோம 8:38-39, எபி 10:22, ரோம 5:4, எபி 6:18, 10:38-39.

3. யூனிட்டேரியன்கள், புதிய எருசலேம் சபை, கியூக்கர்கள், மாடர்னிஷ்டுகள், முதலானவர்கள் சொல்லுகிறபடி விசுவாசத்தினுடைய முக்கிய உத்தேசம் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைக் குறித்து மற்றும் அவருடைய நீதிக்குறித்து நம்புவது இல்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். அப் 16:31, ரோம 3:24-25, ரோம 8:34, கலாத் 2:20, 1 கொரி 1:18, 23, 2:2.

4. யூனிட்டேரியன்கள், ரோமன் கத்தோலிக்கச் சபை, மென்னோனைட்ஸ், புதிய எருசலேம் சபை மற்றும் மாடர்னிஷ்டுகள், சொல்லுகிறபடி அன்பு மற்றும் காரணம் மட்டுமே முக்கியம் விசுவாச பலன் முக்கியம் அல்ல என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். காலத் 5:4, எபி. 11:1.

5. ரோமன் கத்தோலிக்கச் சபை மற்றும் கல்வானிஷ்டுகள் சபையினர் சொல்லுகிறபடி தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அவர்களுடைய சுபாவத்திலிருந்து அவர்களை இரட்சிக்கிற விசுவாசம் அவர்களுடைய இருயதத்திலிருந்து உற்பத்தியாகிறது என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 யோ. 2:3-4, 1 யோ 5:4, யோ 3:36, ரோ 3:31, யோ 2:14-26, எபே 2:10.

## 13 <u>நீதிமானாக்கப்படுதலைக் குறித்த உபதேசம்</u>

## <u>DOCTRINE OF JUSTIFICATION</u>

அ) தேவன் மனிதர்களை அவர்களுடைய சுயக் கிரியைகளின்மூலம் சேர்த்துக் கொள்வதில்லை என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

சங் 130:3-4, சங் 31:1, சங் 143:2.

ஆ) நியாயப் பிரமானத்தின் மூலமான கிரியைகளில்லாமல் இயேசு கிறிஸ்துவின் மூலம் ஜேஷ்டமான காரியத்திற்கு கிருபையின்மூலம் மாத்திரமே அவர் அவர்களை நீதிமானாக்குகிறார். யாராகிலும் இயேசு கிறிஸ்துவின் மூலமாக தம்முடைய பாவத்திற்கு மன்னிப்பு கிடைக்கும் என்று விசுவாசித்தால் அப்படிப்பட்டவர்கள் மாத்திரமே தேவனுடைய

பார்வையில் நீதிமானாக்கப்படுகிறார்கள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ரோ 3:28, ரோ 3:22-24, 1 கொரி 1:30, ரோ 8:33-34.

இ) மேற்சொன்ன உபதேசத்தினாலே கிறிஸ்துவுக்கு வர வேண்டிய கனத்தை தேவன் அவருக்கு கொடுத்து அதன் மூலம் மாத்திரமே பாவிகள் நித்தமும் நிற்கிற தேவனுடைய கருணையை ஆதரவை பெற்றுக் கொள்வதற்கு தேவன் தம்முடைய கிருபையை காண்பிக்கிறார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். 1 கொரி 1:30, ரோ 8:33, 1 தீமோ 2:5, ரோம 8:38-39, 2 கொரி 1:19-20, ரோ 3:22-25.

ஈ) நம்முடைய சுதந்திர காரியங்களை பற்றி இல்லாமல் இயேசு கிறிஸ்து மூலமாக தேவனுடைய கிருபை மூலம் விசுவாசத்தின் மூலம் மாத்திரமே நமக்கு பாவ மன்னிப்பு கிடைக்கும் என்ற உபதேசத்தின்மீதே கிறிஸ்தவம் ஆதாரப்பட்டிருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

ரோ. 3:28, 2 தீமோ 1:9, ரோம 4:5, எபே 2:8-9.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத எல்லா உபதேசங்களையும் நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1. மென்னோனைட்கள், இர்விங்கைட்ஸ்கள், ரோமன் கத்தோலிக்க சபை, சால்வேஷன் ஆர்மி, புதிய எருசலேம், கியூக்கர்கள், ஈஸ்ட்டரன் ஆர்தோடக்ஸ் சபை முதலானவர்கள் சொல்லுகிறபடி இந்த மீட்பின்மூலம் தேவன் பாவிகளுக்கு கிறிஸ்துவினுடைய நீதி அனுகிரகிக்கப்பட்டு என்றால் தேவனுடைய மிக முக்யமான கிருபை மூலம் பாவிகளை புதியதாய் மாற்றி பரிசுத்தமாய்

மாற்றுவதற்கு இந்த மீட்பு என்பது தேவனுடைய சட்டத்தின்படி நடக்கிற காரியம் அல்ல என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ரோ 3:24-25, ரோ 8:33-34, ரோ 11:6.

2. ஆர்மேனியன்கள், யூனிவர்ஸலிஸ்டுகள், யூனிட்டேரியன்கள், மாடர்னிஸ்டுகள், முதலானவர்கள் சொல்லுகிறபடி கிறிஸ்து மூலமாக அல்லாமல் அவருடைய நீதி நம்மீது தங்குவதின்மூலம் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபே 1:7, ரோ 11:6, அப் 10:43, 2 கொரி 5:21, பிலி 3:9.

3. ஏழாம் நாளை ஆசரிப்போர் சொல்லுகிறபடி இந்த மீட்பு தற்போது இருக்கிற பாவங்களுக்கு மன்னிப்பு கொடுப்பது இல்லை. ஏனென்றால் இன்னும் பிராயசித்தம் பூர்த்தி செய்யப்படவில்லை. ஆகவே யாராகிலும் பாவத்தை ஒப்புக் கொண்டு அவர்களை தூரப்படுத்திக் கொள்கிறாரோ அப்படிப்பட்டவர்களுக்கு எதிர்காலத்தில் மன்னிப்பு என்ற வாக்குதத்தம் கொடுக்கப்படும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ரோம 3:24-25, சங் 103:3.

4. கிறிஸ்தவ விஞ்ஞானிகள் சொல்லுகிறபடி பாவம் மன்னிக்கப்படவில்லை. அவை நிர்மூலம் செய்யப்படும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 யோ 1:8-9.

5. ரோமன் கத்தோலிக்கச் சபை மற்றும் யூனிவர்ஸலிஸ்டுகள், சொல்லுகிறபடி தேவன் நம் பாவங்களை மன்னித்தார். அந்தப் பாவங்கள் நிமித்தம் நமக்கு வர வேண்டிய தண்டனையை முழுவதும் அகற்றுவதற்கு மனுஷன் தன் பாவத்திற்கு தானே தற்காலிகமாக தண்டனையை போட்டுக்